பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

14 10 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றம் அமைத்துள்ள விசாரணைக் குழு உண்மைகளை வெளிக்கொணரும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. வருங்கால வைப்பு நிதியில் இருந்து அவசர தேவைகளுக்கு பணம் எடுப்பதற்கான விதிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை இன்று கூடுகிறது.

4. Foxcon நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

5. டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றம் அமைத்துள்ள விசாரணைக் குழு உண்மைகளை வெளிக்கொணரும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிக்கப்பட்டவர்கள் கோரியதால்தான் சி.பி.ஐ. விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

ஊழியர் வருங்கால வைப்பு நிதியில் 100 சதவீதம் வரை பணம் எடுக்கும் வகையில் விதிமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற வருங்கால வைப்பு நிதியின் அறங்காவலர்கள் வாரியக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறினார்.

உடல்நலக் குறைவு, கல்வி, திருமணம் உள்ளிட்ட தேவைகளுக்காக வருங்கால வைப்பு நிதியில் இருந்து 100 சதவீதம் வரை பணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

பணம் எடுப்பதற்கான உச்சவரம்பு கல்விக்கு 10 மடங்கும், திருமணத்திற்கு 5 மடங்கும், வேலையின்மை, தொற்றுநோய் பரவல் ஆகியவற்றுக்கு கணிசமாகவும் பணம் எடுக்க அனுமதியளிக்கப்படும் என்று அவர் கூறினார்.

வருங்கால வைப்பு நிதி தொடர்பான வழக்குகளைக் குறைப்பதற்காக விஷ்வாஸ் என்ற புதிய திட்டத்தையும் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவை இன்று கூடுகிறது.

இந்தக கூட்டத்தொடர் வரும் வெள்ளிக்கிழமை வரை நான்கு நாட்கள் நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு. அப்பாவு கூறியுள்ளார்.

இன்று பேரவை கூடியவுடன் முக்கிய தலைவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவை ஒத்திவைக்கப்பட உள்ளது.

நாளை கூடுதல் மானியக் கோரிக்கை பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடைபெறும்.

கரூரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் மாநிலத்தில் நிலவும் சட்டம்-ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை இந்தக் கூட்டத்தொடரில் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

<<<<>>>>

செல்பேசிகளுக்கான உதிரி பாகங்களைத் தயாரிக்கும் Foxcon நிறுவனம் தமிழ்நாட்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளதை வரவேற்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த முதலீடு மூலம் 15 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டை தெற்காசியாவின் உற்பத்தி மற்றும் புதுமைக்கான மையமாக உயர்த்துவதற்கான மாநில அரசின் பயணத்தில் இது மற்றொரு மைல்கல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பருவமழை தொடங்குவதற்கு முன்பு நெடுஞ்சாலைப் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று அதிகாரிகளுடன் ஆய்வு நடத்திய அவர், நெடுஞ்சாலைத் துறைக்கு மாநில பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையை முழுவதுமாக செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பள்ளம் இல்லா சாலைகள், பாதுகாப்பான பயணம், விபத்தில்லா தமிழ்நாடு என்ற இலக்கை நோக்கி மாநில அரசு சென்றுகொண்டிருப்பதாகவும், இதற்காக "நம்ம சாலை" என்ற செயலி ஏற்கனவே பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு பருவமழை வழக்கத்திற்கு அதிகமாக பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்திருப்பதால் நெடுஞ்சாலைகளில் வெள்ளநீர் தடுப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்து மழைநீர் கால்வாய்களிலும் கசடுகள் அகற்றப்பட்டு வெள்ளநீர் விரைவாக செல்ல நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**<<<<>>>>**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியிலும் இன்று இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சின்னசேலம், கல்வராயன்மலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

இந்த மழை மக்காச்சோளம் மற்றும் மரவள்ளி, கரும்பு, நிலக்கடலை சாகுபடிக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் இன்று அதிகாலை பரவலாக மழை பெய்து.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ஹமாஸ் வசமிருந்த இஸ்ரேல் பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளதால் காஸா அமைதித் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

பாகிஸ்தானை தவிர அனைத்து அண்டை நாடுகளும் ஆஃப்கனிஸ்தானுடன் நட்புடன் பழகி வருவதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அமீர்கான் முத்தாகி தெரிவித்துள்ளார்.

----------

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற டிராக்டர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்தனர். 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

----------

சென்னையில் சுமார் 32 கோடி ரூபாய் செலவில் தொன்மை மாறாமல் புணரமைக்கப்பட்டு வரும் விக்டோரியா பொது அரங்கத்தை அமைச்சர் திரு. சேகர்பாபு நேற்று பார்வையிட்டு பணிகளை ஆய்வு செய்தார்.

----------

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அரசு மேல்நிலைப் பள்ளியில் கற்றல் திறன் குறித்து ஆட்சியர் திருமதி அழகுமீனா மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

----------

கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் சிறுவர்களுக்கான பூங்காவை காவல் ஆணையர் திரு. சரவண சுந்தர் திறந்து வைத்தார்.

----------

திருவள்ளூர் மாவட்டத்தில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவி தொகைகளை விரைந்து வழங்க அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் அறிவுறுத்தியுள்ளார்.

----------

விழுப்புரத்தில் ரயில்வேக்கு சொந்தமான இடத்தில் இருந்து அகற்றப்பட்ட 44 குடும்பங்களுக்கு மாற்று இடத்தில் வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரகுமான் நேற்று வழங்கினார்.

----------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக உள்ளது.

----------

சென்னையில் இரும்பு மற்றும் எஃகு கழிவுகளின் வர்த்தகத்தில் ஜி.எஸ்.டி. வரி மோசடியில் ஈடுபட்டதாக 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

----------

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென், ஆயுஷ் ஷெட்டி ஆகியோரும், ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும், சாய் பிரதிக் - ப்ருத்வி கிருஷ்ணமூர்த்தி இணையும் கலந்துகொள்கிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சார்பில் Anmol Kharb பங்கேற்கிறார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் தனீஷா கிரெஸ்டோ - துருவ் கபிலா இணை பங்கேற்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவில் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்வி இணை பங்கேற்கிறது.

-------------

ஆசியக் கோப்பை தகுதிச் சுற்று கால்பந்துப் போட்டியில் இந்தியா இன்று சிங்கப்பூரை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-----------

ஜகார்தாவில் நேற்று நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டோருக்கான இந்தோனேஷியாவுக்கு எதிரான கால்பந்து போட்டியில் இந்தியா 1-1 என்ற கோல் கணக்கில் டிரா செய்தது.

<<<<>>>>